මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PMM/Eval/2024
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.01.12

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு சுற்றறிக்கை இல: 01/2024

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
சகல உள்ளூராட்சி சபைகளின் பிரதம செயலாளர்கள்
விசேட செலவின பிரிவுகளின் தலைவர்கள்
சகல திணைக்களத் தலைவர்கள்
சகல அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகள் / அரசுடமை கம்பனிகளின் தலைவர்கள்,
சகல மாவட்ட செயலாளர்கள்

## இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தல் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து அரச நிறுவனங்களின் வகிபாகங்களும் பொறுப்புகளும்

1. தற்போது, இலங்கையின் பன்முக அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பல தசாப்தங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட முதலீடுகள் மற்றும் கொள்கைகளின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவது தீவிரமான பேச்சுப் பொருளாக உட்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 2018 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட *தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை,* ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் நடைமுறையில் உள்ள கொள்கைகள் மற்றும் அபிவிருத்தித் தலையீடுகள் ஆகியவற்றின் வெற்றி மற்றும் தோல்வி தொடர்பாக மீள்பார்வையிடுவதற்கு நம்பகமான மற்றும் அறிவியல் பூர்வமாக சரிபார்க்கப்பட்ட தகவல்களை மிகவும் புதுப்பிக்கப்பட்ட மற்றும் பொருத்தமான கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து தங்கள் கவனம் செலுத்தப்படுகின்றது.

2. இதனைக் கருத்திற் கொண்டு, இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகளாக மிகவும் பொருத்தமான சாத்தியமான கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி முதலீடுகள் மற்றும் பொருளாதார திட்டமிடல் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதில் மதிப்பீடுகளின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளைப் பயன்படுத்துவது கட்டாயப்படுத்தப்படல் வேண்டும். இச்செயன்முறையின் மூலம் பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுவதால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை சரியான நேரத்தில் வழங்குவது சாத்தியமாகும்.

3. அரச நிறுவன பொறிமுறைக்குள் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை வெற்றிகரமாக நிறுவனமயமாக்குவதற்குத் தேவையான உத்திகள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ள *தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தற் கட்டமைப்பானது* 2023 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அன்றிலிருந்து விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்து மட்டங்களிலும் அரச நிறுவனங்களை உள்ளடக்கியதாகத் தொடர்கின்றது. இதன் மூலம் மதிப்பீடானது அனைத்துத் துறைகளிலும் ஒரு பொதுவான நடைமுறையாகவும் மற்றும் நாட்டில் மதிப்பீட்டுக் கலாசாரம் படிப்படியாக நிறுவப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

4. இக்கட்டமைப்பிற்கு இணங்க அனைத்து அரச துறை நிறுவனங்களும் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. *தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தற் கட்டமைப்பினை* பின்வரும் இணைய இணைப்பைப் பயன்படுத்தி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

   (இணைய இணைப்பு : https://www.treasury.gov.lk/web/national-evaluation-policy-implementation-framework-2023). அபிவிருத்தி மதிப்பீட்டுடன் தொடர்புடைய தொழில்நுட்ப உதவிகளுக்காக பொதுத்திறைசேரியின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. எந்தவொரு புதிய நிறுவனத்தையும் நிறுவுதல் அல்லது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் ஆளணி பதவிகளை உருவாக்குவது மதிப்பீடுகளின் நடைமுறைச் செயலாக்கத்திற்குட்படாது. எவ்வாறாயினும், அமைச்சரவை தீர்வு இல. 23/2283/604/223 இன் படி, அரச நிறுவனங்களால் ஆற்ற வேண்டிய பங்கின் ஒரு பகுதியாக அபிவிருத்தி மதிப்பீடு என்ற எண்ணக்கருவை சேர்ப்பது அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களினதும் பொறுப்பாகும். 2016ம் ஆண்டு 12ம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் உள்ள அபிவிருத்தி செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கிணங்க, தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் விதிகளுக்கமைய அபிவிருத்தி தொடர்பான நம்பகமான, தரமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல் களஞ்சியத்தினை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைத்து அரசு நிறுவனங்களின் தலைவர்களும் பொறுப்புடையவராவார்கள்.

6. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது, ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும், அபிவிருத்தி மதிப்பீட்டிற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்பினை விடுக்கும். அடுத்து வரும் ஆண்டில் முன்மொழியப்பட்ட மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான ஒதுக்கீடுகளை அங்கீகரிப்பது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால், அதற்கேற்ப மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான முன்கூட்டியே தயார்நிலையை உறுதிப்படுத்துவது அனைத்து அரச நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

7. நாட்டில் நிலவும் சவாலான சமூக-பொருளாதார நிலைமைக்கு மத்தியில், அமைச்சுகள் உட்பட அரச நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகவும், உரிய நேரத்தில் நிறைவு செய்வதன் மூலம், பொதுமக்களின் வாழ்க்கை நிலைமையை சிறந்த நிலைக்கு உயர்த்துவது ஒரு குறிப்பிட்ட தேவையாகும். எனவே, மதிப்பீட்டிற்கான அபிவிருத்தி தலையீடுகளைத் தேர்ந்தெடுப்பதில், பொதுமக்களின் வாழ்க்கையில் அதிக தாக்கத்தை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக, அரச பொறிமுறையில் மதிப்பீட்டு எண்ணக்கரு நிறுவனமயமாக்கப்படும் வரை, அனைத்து அபிவிருத்தி மதிப்பீடுகளும் நிலவும் நிதி சிக்கல்களை முகாமை செய்வதன் மூலம் கருத்திட்ட முகாமைத்துவம்

மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் அவ்வவ் நிரல் அமைச்சுக்களினால் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும்.

8. அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட காலத்தின் 50% இனை கடந்த போதிலும், உண்மையான முன்னேற்றம் 25% க்கும் குறைவாகவே இருக்கும் பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களின் எதிர்காலம் குறித்து தீர்மானமெடுப்பதற்காக இடைக்கால மதிப்பீடுகள் நடாத்தப்படும்.

9. அபிவிருத்தி மதிப்பீடுகள் அமைச்சரவையால் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள "தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழு" மூலம் தெரிவு செய்யப்படும், அதன் பின்னர் மதிப்பீட்டு கண்டுபிடிப்புகள் மற்றும் அதன் அடிப்படையிலான பரிந்துரைகள் குறிப்பிட்ட குழுவின் அவதானிப்புக்களுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். பொருத்தமான கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

10. நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஒதுக்கீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் போது பொதுத் திறைசேரியினால் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக அனைத்து முன்மொழியப்பட்ட மதிப்பீடுகளுக்கும் அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகளைச் செய்வதில் உள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு, சாத்தியமான போதெல்லாம் மதிப்பீடுகளுக்கு பொருத்தமான மாற்று நிதி மூலங்களை அடையாளம் காண வேண்டும். மாற்று நிதி மூலங்களின் தகுதி மற்றும் நம்பகத்தன்மையானது, பொருத்தமான நடைமுறையை கடைபிடிப்பதன் மூலம், திறைசேரியின் பொருத்தமான திணைக்களங்களின் உதவியுடன் சரிபார்க்கப்பட வேண்டும். மேலும், மதிப்பீட்டில் அறிவு மற்றும் அனுபவத்தைப் பரிமாறிக் கொள்வதற்கும், மதிப்பீடுகளுக்கு அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தேவையான ஒதுக்கீட்டைக் குறைப்பதற்கும், நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவுதிறன் கொண்ட பொருத்தமான பங்குதாரருடன் கூட்டு மதிப்பீடுகளைத் (joint evaluations) திட்டமிடுவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

11. நாட்டிற்குள் மதிப்பீட்டுக் கலாசாரத்தை நிறுவுவதனை கருத்திற்கொண்டு, தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதனூடாக பொதுத்துறையின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் அதே வேளையில், பொது முதலீடுகளால் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், தேசிய மதிப்பீட்டு வழிகாட்டல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு பொறுப்பான அரச நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டத்தில் மதிப்பீடு ஒரு முக்கிய பகுதியாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

12. பின்வரும் மின்னஞ்சல் அல்லது தொலைபேசி எண் மூலம் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை செயற்படுத்தற் கட்டமைப்பின் பயன்பாடு தொடர்பான ஏதேனும் தெளிவின்மை அல்லது சிக்கலைத் தீர்க்க தேவையான தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் துறையின் பணிப்பாளர் நாயகம் அவர்களை தொடர்பு கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றது.

12.1 மின்னஞ்சல் - dgpmm@pmmd.treasury.gov.lk

12.2 தொலைபேசி - 011-2151444

**கே. எம். மகிந்த சிறிவர்தன**
செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம்